Reg. No. : ......................................

Name : ..........................................

**SY-20**

**SECOND YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH 2022**

Part – III

**TAMIL (Optional)**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

## பிரிவு – I

**1 முதல் 6 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம்.**

**(4 × 1 மதிப்பெண் = 4)**

1. 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்று.

   (அ) புறநானூறு (ஆ) முக்கூடற்பள்ளு

   (இ) நன்னூல் (ஈ) அகநானூறு

2. 'படைப்பாளி' என்னும் கவிதையின் ஆசிரியர்?

   (அ) ஆலங்குடி சோமு (ஆ) விவேகா

   (இ) சாமி பழனியப்பன் (ஈ) கல்யாண்ஜி

3. "பெரியோரை வியத்தலு மிலமே
   சிறியோரை யிகழ்த லதனினு மிலமே"
   – இக்கவிதை வரிகளுக்கு ஏத்த சங்க புலவர்?

   (அ) கணியன் பூங்குன்றனார் (ஆ) ஔவையார்

   (இ) நக்கீரர் (ஈ) அறிவுடை நம்பி

4. “இருள்தீர் மணி விளக்கத்(து) எழிலோர் கோவே” – என்னும் ஔவையார் பாடலடியில் வந்துள்ள ‘எழில்’ என்ற சொல் எதனைக் குறிக்கிறது?

(அ) எழில் மலை (ஆ) பொதிகை மலை

(இ) ஆனை மலை (ஈ) கொல்லி மலை

5. வீரமாமுனிவர் இயற்றிய நூல்?

(அ) இயேசு காவியம் (ஆ) அழகின் சிரிப்பு

(இ) தேம்பாவணி (ஈ) மணிமேகலை

6. வலைப்பூ என்பதன் ஆங்கிலச் சொல்?

(அ) *Code* (ஆ) *Blog*

(இ) *Internet* (ஈ) *Web Browser*

**7 முதல் 10 வரையுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுகங்கள். மதிப்பெண் 1 வீதம். (4 × 1 மதிப்பெண் = 4)**

7. கரிப்பு மணிகள் நாவலை எழுதியவர்?

(அ) பாலகுமாரன் (ஆ) அநுத்தமா

(இ) இலட்சுமி (ஈ) இராஜம் கிருஷ்ணன்

8. தமிழின் தொன்மையான இலக்கண நூல்?

(அ) வீரசோழியம் (ஆ) நேமிநாதம்

(இ) தொல்காப்பியம் (ஈ) நன்னூல்

9. “வாழை நிலைக்குது சோலை தழைக்குது ஏழைகளுக்கு அதில் என்ன கிடைக்குது?” – இக்கவிதை வரிகளைப் பாடியவர்?.

(அ) மு. மேத்தா (ஆ) பட்டுக்கோட்டை

(இ) பாரதியார் (ஈ) பாரதிதாசன்

10. தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்தவர்?

(அ) கால்டுவெல் (ஆ) ராபர்ட் டி நொபிலி

(இ) சீகன் பால்கு ஐயர் (ஈ) எல்லிஸ் துரை

## பிரிவு – II

**11 முதல் 15 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம். (3 × 2 மதிப்பெண்கள் = 6)**

11. ‘தாத்தா தொலைந்து போனார்’ என்ற கதையில் வரும் இரு கதாப் பாத்திரங்களின் பெயர்களை எழுதுங்கள்.

12. “மனிதரில் நீயுமோர் மனிதன்! மண்ணன்று இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!” – இப்பாடல் உணர்த்தும் மன உணர்ச்சியினை விளக்கக் குறிப்பாக எழுதுங்கள்.

13. சிற்றிலக்கியம் – சிறு விளக்கம் எழுதுங்கள்.

14. வலைப்பூ – சிறு குறிப்பு எழுதுங்கள்.

15. கடல் நீரோட்டம் உருவாகுவதற்கான இரண்டு கராணங்களை எழுதுங்கள்.

**16 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம்.** **(2 × 2 மதிப்பெண்கள் = 4)**

16. பொட்டல் புதூர் கிராமத்தில் பிரசித்திப் பெற்ற இரு வகை நெசவுச் தொழில்கள் எவை ?

17. மொழி ஏகாதிபத்யம் என்றால் என்ன ?

18. கூம்புத் தலைப்பு – சிறு விளக்கம் எழுதுங்கள்.

## பிரிவு – III

**19 முதல் 23 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு அரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம்.**

**(3 × 4 மதிப்பெண்கள் = 12)**

19. "எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும் இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்"– பராதிதாசனின் இவ்வரிகள் வெளிப்படுத்தும் கருத்துக்களைக் துண்டு பிரசுரமாக வெளியிடுங்கள்.

20. சமூக வலைதளங்களைக் கையாளும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு கருத்துக்களைப் பெட்டிச் செய்தியாக எழுதுங்கள்.

21. "இன்னல்நிறை ஆழியில்
    இறங்கி நல்ல முத்தெடுத்து
மன்னுலகினுக்களிக்குத் தோழன் – அங்கு
    மாய்வதனை என்று புவிகாணும்"
    – இப்பாடல் அடிகளை அடியொற்றி விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.

22. சுற்றுச் சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு உங்கள் பள்ளியில் சிறப்பு மலர் வெளியிடவிருக்கிறார்கள். அதில் 'இயற்கைப் பேரழிவுக்குக் காரணி மனித சமூகமே' என்னும் தலைப்பில் விவாதக் குறிப்பு தயாரியுங்கள்.

23. ஏற்றபடி இணைத்து எழுதுங்கள்.

அழகின் சிரிப்பு – கவிஞர் அறிவுமதி

தேடல் – பாரதிதாசன்

நகரம் – கல்யாண்ஜி

இறந்தகாலம் – நந்தலாலா

**24 – 25 வினாக்களுள் எவையேனும் ஒன்றனுக்கு அரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம்.**

**(1 × 4 மதிப்பெண்கள் = 4)**

24. ஆயத்த வீடுகளின் நன்மைகள் நான்கினை நிரல்படுத்தி எழுதுங்கள்.

25. தூயத் தமிழில் எழுதுங்கள்.

"ஏண்டா, இப்படி எதுக்கும் உபயோகமில்லாம இருந்து இருக்கிறவங்க கழுத்த அழுக்கிறே? மணி பன்னிரண்டு ஆச்சு... காலாகாலத்துல சோத்துக் கதைய முடிச்சாதான் மேக்கொண்டு வேலை ஆகும்."

**பிரிவு – IV**

**26 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம்.** **(3 × 6 மதிப்பெண்கள் = 18)**

26. சுற்றுச் சூழல் தினத்தையொட்டி உங்கள் பள்ளியில் சொற்பொழிவாற்ற பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் வருகைத்தரவிருக்கிறார். அவரைப் பேட்டிக் காணும் பொருட்டு ஐந்து வினாக்கள் அடங்கிய வினாநிரலைத் தயாரியுங்கள்.

27. தொழில் வளர்ச்சியில் தொழில் நுட்பங்களின் பங்கு குறித்து சொற்பொழிவுரை தயாரியுங்கள்.

28. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்" – இக்குறள் உணர்த்தும் சமதர்மம் குறித்த சிந்தனைகளைத் திறனாய்வு செய்யுங்கள்.

29. மொழியைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டியன யாவை? கருத்துக்களைத் தொகுத்து எழுதுங்கள்.

**30 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம். (2 × 6 மதிப்பெண்கள் = 12)**

30. *"அப்ப எங்க*
*பாளையத்து சந்தையினா*
*பதினெட்டு பட்டியும் கூடுமுங்க*
*மண்பானை யேவாரம் சூடு பறக்குமுங்க*

*இப்பவும் எங்க*
*பாளையத்து சந்தையினா*
*பதினெட்டு பட்டியும் கூடுமுங்க*
*பிளாஸ்டிக்குட யேவாரம்*
*சூடுபிடிக்குதுங்க"*

*– இப்பாடல் வரிகள் சுட்டும் கருத்துக்களை மையப்படுத்தி விமர்சனக் கட்டுரை எழுதுங்கள்.*

31. *"மனிதரை மனிதர் சரிநிகர் சமமாய்*
*மதிப்பது நம் கடமை*
*வள்ளுவப் பெருமான் சொல்லிய வழியில்*
*வாழ்வது அறிவுடைமை*
*அண்ணன் தம்பியாய் அனைவரும் வாழ்ந்து*
*அருள் விளக் கேற்றிடுவோம்"*

*– இப்பாடலடிகளைப் படித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.*

*(அ) மனிதர் மனிதரை எவ்வாறு மதித்தல் வேண்டும்?*

*(ஆ) யாருடைய வழியில் வாழ்வது அறிவுடைமை?*

*(இ) அருள் விளக்கேற்றிட நாம் எவ்வாறு வாழ வேண்டும்?*

32. *உங்கள் பள்ளி நாளிதழ் தயாரிக்கும் பொருட்டு பத்திரிகை ஆசிரியர் பொறுப்பு தரப்படுகிறது. அப்பத்திரிகைக்கு இன்றைய மக்கள் வாழ்வியலும் சுற்றுச் சூழலும் என்னும் தலைப்பில் தலையங்கம் தயாரியுங்கள்.*

## பிரிவு – V

**33 முதல் 35 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம். (2 × 8 மதிப்பெண்கள் = 16)**

33. தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்களின் பங்கு குறித்து கட்டுரை எழுதுங்கள்.

34. ‘சுற்றுச் சூழல் மாசடைவும் மட்காப் பொருட்களும்’ எனும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை எழுதுங்கள்.

35. வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டுகளைத் தொகுத்து கட்டுரையாக எழுதுங்கள்.